மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Historical Document: Anandarangappillai Diary

Dr. S. Prabavathi

Assistant Professor, Department of Tamil, Arulmigu Kapaleeswarar Arts and Science College, Chennai, India

Manuscript ID : **MT105A0044**

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 16.09.2022
Revised: 22.09.2022
Accepted: 28.09.2022
Published: 30.09.2022

Pages : 62-75

DOI: 10.5281/zenodo.7371788

ABSTRACT:

Anandarangappillai's diary was the first diary published in Tamil. The fact that the diary is not an autobiography but a social history and the history of the struggle between nations gives this diary its historical significance. This diary is a very detailed record of the political, religious, social and economic conditions prevailing in the 18th century, as well as the customs and beliefs of the people. This article first explains the purpose of writing Anandarangappillai's diary, the nature of the diary, the copies and editions of the diary. Then begins his birth, explains his life history in various capacities as the head of the merchant guild, Dubashi, and the literature sung about him.

KEYWORDS:

Anadharangappillai, Tamil Dairy, Pondicherry, French Chamber of Commerce, Dubashi, Duplex

வரலாற்று ஆவணம்: ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு

முனைவர் சு. பிரபாவதி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

ஆனந்தரங்கப்பிள்ளையின் நாட்குறிப்பே தமிழில் வெளியான முதல் நாட்குறிப்பாகும். நாட்குறிப்பு என்பது தன்வரலாறாக அல்லாமல் ஒரு சமூக வரலாறாகவும், நாடுகளுக்கிடைய நிகழ்ந்த போராட்ட வரலாறாகவும் இருப்பது இந்நாட்குறிப்பிற்கு வரலாற்றுச் சிறப்பினைக் கொடுக்கிறது. 18-ஆம் நூற்றாண்டில் நிலவிய அரசியல், சமய, சமூக, பொருளாதர நிலைகள் குறித்தும், மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் குறித்தும் மிக விரிவான பதிவாக இந்நாட்குறிப்பு விளங்குகிறது. இக்கட்டுரை ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு எழுதியதன் நோக்கம், நாட்குறிப்பின் தன்மை, நாட்குறிப்பின் நகல்கள், பதிப்புகள் குறித்து முதலில் விளக்குகிறது. பின்னர் அவரின் பிறப்பு தொடங்கி, வணிகக் கழகத்தின் தலைவர், துபாஷி எனப் பல்வேறு பொறுப்புகளில் இருந்த அவருடைய வாழ்க்கை வரலாறு குறித்தும், அவர்மீது பாடப்பட்ட இலக்கியங்கள் குறித்தும் விளக்குகிறது.

கருச்சொற்கள்

ஆனந்தரங்கப்பிள்ளை, தமிழ் நாட்குறிப்பு, புதுச்சேரி, பிரெஞ்சு வணிகக் கழகம், துவிபாஷி, ஆளுநர் தூப்ளே

முன்னுரை

நாட்குறிப்புகள் எழுதும் வழக்கம் தமிழ்ச் சூழலுக்குப் புதுமையான ஒன்று. கல்வெட்டுகள், செப்பேடுகள், மெய்க்கீர்த்திகள் ஆகியவற்றின் மூலம் வரலாற்றுச் சிறப்புமிக்க சில நிகழ்வுகளை மட்டுமே அறியமுடிகிறது. இதுபோன்ற சில வரலாற்றுப் பதிவுகளைத் தாண்டி அன்றாட நிகழ்வுகளைப் பதிவு செய்யும் வழக்கம் தமிழ்ச் சூழலில் இல்லை. 18-ஆம் நூற்றாண்டில் தான் அன்றாட நிகழ்வுகளை நாட்குறிப்புகளாக எழுதிவைக்கும் வழக்கம் தமிழில் உருவானது. ஐரோப்பியர் வருகைக்குப் பின்பு எழுந்த தமிழ் இலக்கிய வகைமைகளிலும், நிகழ்வுகளை வரலாறுகளாக ஆவணப்படுத்தும் முறையிலும் பல புதுமைகள் நிகழ்ந்துள்ளதை இன்றைக்குக் கிடைக்கும் படைப்புகள் மற்றும் ஆவணங்கள் மூலம் அறியமுடிகிறது.

தமிழில் முதல் நாட்குறிப்பு

நமக்குக் கிடைக்கும் நாட்குறிப்புகளில் மிகவும் பழமையானது ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பாகும். இவருக்கு முன்பு குருவப்பப்பிள்ளை ஒரு நாட்குறிப்பு எழுதி உள்ளார் என்ற செய்தி ஆனந்தரங்கரின் 28.08.1753ஆம் நாள் குறிப்பிலிருந்து அறிய முடிகிறது. ஆனந்தரங்கரிடம் கவர்னர் துய்ப்ளே, 'குருவப்பப் பிள்ளை ஆங்கிலேயரைப் பற்றியும், பிரெஞ்சுக்காரர்களைப் பற்றியும் தமது நாட்குறிப்பில் என்ன எழுதியிருக்கிறார்' என்று கேட்ட நிகழ்ச்சியைப் பதிவு செய்திருக்கிறார். இதன்மூலம் ஆனந்தரங்கருக்கு முன்பே குருவப்பப்பிள்ளை நாட்குறிப்பு எழுதியுள்ளார் என்பதை அறியமுடிகிறது[1]. ஆனால் அவை நமக்குக் கிடைக்கவில்லை. எனவே, நாட்குறிப்பு குறித்த வரலாற்றை நாம் ஆனந்தரங்கரிலிருந்தே தொடங்க வேண்டி உள்ளது.

தஸ்திரம் - தினப்படி சேதிக்குறிப்பு - நாட்குறிப்பு

18-ஆம் நூற்றாண்டில் நாட்குறிப்பினைக் குறிக்க **"தஸ்திரம்"** என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். இச்சொல்லுக்குப் பதிவேடு, ஆவணம் என்று பொருள். ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் முதல்தொகுதி **"பிரத்தியேகமான ஆனந்தரங்கப்பிள்ளையவர்களின் சொஸ்த லிகித தினப்படி சேதிக் குறிப்பு"** என்ற தலைப்புடன் வெளிவந்துள்ளது. இதில் '**சொஸ்த**' என்ற சொல்லுக்கு '**தெளிந்த**' அல்லது '**உரிமையுடைய**' என்னும் பொருள் கூறப்படுகிறது. **"லிகிதம்"** என்றால், '**கடிதம்**' அல்லது '**ஆவணம்**' என்னும் பொருளாகும். **"தினப்படி சேதிக் குறிப்பு"** என்பது '**நாட்குறிப்பு**' என்னும் பொருளைத் தரக்கூடிய சொல் ஆகும்.

ஆனந்தரங்கர் நாட்குறிப்பு (06.09.1736 - 11.01.1961)

ஆனந்தரங்கர் 1736 செப்டம்பர் 6-ஆம் தேதி முதல் 1761 ஜனவரி 11-ஆம் தேதி வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். இவர் நாட்குறிப்பு எழுதி முடித்து 85 ஆண்டுகளுக்குப் பின்பே அது குறித்து வெளி உலகத்திற்குத் தெரிய வந்தது. 1846-ல் புதுச்சேரியில் வருவாய்த் துறை அதிகாரியாகப் பணியாற்றிய ஆர்மோன் **கலுவா மொபார்** என்பவர் ஆனந்தரங்கரின் நாட்குறிப்பை முதன்முதலாகக் கண்டெடுத்துள்ளார். அவை பதிமூன்று பதிவேடுகளாக இருந்துள்ளன. அதோடு ஆனந்தரங்கரின் தம்பி திருவேங்கடம் பிள்ளையின் நாட்குறிப்புப் பதிவேடு மூன்றும் சேர்த்து பதினாறு பதிவேடுகளையும் கலுவா மொபார் நகலெடுத்துக்கொண்டு மூலத்தை ஆனந்தரங்கரின் சந்ததிகளிடமே ஒப்படைத்துவிடுகிறார். இவர் எடுத்த நகல் ஆங்கிலேய ஆவணக்காப்பகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

1849-50 ஆண்டுகளில் அரசு ஆவணக் காப்பக ஊழியராகப் பணிபுரிந்த **எதுவார் ஆரியேல்** என்னும் பிரெஞ்சு நாட்டுக்காரர் ஆனந்தரங்கர் நாட்குறிப்பை நகல் எடுத்து பிரான்சு நாட்டிற்கு அனுப்பி வைக்கிறார். இவர் அனுப்பிய நாட்குறிப்பின் நகல்கள் பாரிஸ் நகரில் உள்ள தேசிய நூலகத்தில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஜெனரல் மெக்லீடு ஆங்கிலேய முகவராகப் புதுச்சேரியில் இருந்தபோது 1892-1896 ஆண்டுகளில் நாட்குறிப்பினை நகல் எடுக்கும் பணியினைச் செய்தார். இந்த நகல்களே இன்று தமிழ்நாடு மாநில வரலாற்று ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு, மராத்தி முதலிய மொழிகளில் ஆனந்தரங்கரின் நாட்குறிப்புகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாக சிலம்பு நா. செல்வராசு குறிப்பிடுகிறார்[2].

முதல் எட்டு தொகுதிகளின் பதிப்பாசிரியர் யார் என்பது தெரியவில்லை. ஞானதியாகுவின் கூற்றின் அடிப்படையில் பிழை திருத்தம் செய்த தேசிகம்பிள்ளையே பதிப்பாசிரியராக இருந்திருக்கலாம் என்று ஆலாலசுந்தரம் கருதுகிறார். இவற்றில் முதல் நான்கு தொகுதிகளிலும் நூன்முகம், ஆங்கிலமொழிபெயர்ப்பாளர்களின் வியாக்கியான குறிப்புகள், அத்தியாயப் பிரிப்பு முறைகள், நாட்குறிப்புகள் என்ற அமைப்பில் வெளியிடப்பட்டுள்ளன. தொகுதி ஐந்து முதல் எட்டு வரையிலான பதிப்புகளில் நாட்குறிப்புகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. தொகுதி ஒன்பது முதல் பன்னிரெண்டு வரை ஆலாலசுந்தரம் அவர்களுடைய பதிப்புரையோடு வெளிவந்துள்ளது.

"வசாதராய விசய ஆனந்தரங்கப் பிள்ளை கையெழுத்தாய் யெழுதின தினசரி தஸ்திரம். இது யாதாமொருவர் நன்னாய் பாற்கு றாரோ அவர்களுக்குப் புத்தியும் வித்தையும் அயிட அயிசுவரியமும் சந்தான சமளித்தியு மென்றாமலுண்டாம்" என்னும் குறிப்பும் அதன் பின் **"ஸ்ரீராம ஜெயம்"** என்னும் கடவுள் துதியும் பிரிட்டிஷ் அரசு வெளியிட்ட ஆங்கிலப்பதிப்பில் மட்டுமே காணப்படுவதாகவும் மற்ற எந்த பதிப்புகளிலும் இல்லை என்றும் ஆலாலசுந்தரம் குறிப்பிடுகிறார்[3]. இக்குறிப்பு பாரிஸில் உள்ள நாட்குறிப்பு நகலில் உள்ளதாக ஜெயசீல ஸ்டீபன் (1999) குறிப்பிடுகிறார்[4]. எனவே இதுபோன்ற இடைச்செருகல்கள் நகல் எடுத்த எழுத்தர்களால் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு.

நாட்குறிப்பு எழுதுதல்

ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு எழுதுவதற்கு முக்கியக்காரணமாக இருந்தது அவருடைய வேலை தான். 1674இல் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கழகம் புதுச்சேரியில் தனது வணிகத்தைத் தொடங்கியது. பிரெஞ்சு வணிகக் கழகத்தின் நிர்வாகக் குழு

நாட்குறிப்பு ஒன்றைச் சரியாகவும் கண்டிப்பாகவும் பராமரிக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது. இதன்படி கழக முகவர்கள் தமது அன்றாட செயற்பாடுகளைப் பிரெஞ்சு மொழியில் நினைவுக் குறிப்புகளாக எழுதி வைத்துள்ளனர். அதன்படி பிரான்சுவா மர்த்தேன் எழுதிய நாட்குறிப்புகள் கி.பி 1664 முதல் 1703 வரை கிடைத்துள்ளதாக ஜெயசீல ஸ்டீபன் குறிப்பிடுகிறார்[5]. எனவே, ஆனந்தரங்கரும் நாட்குறிப்பு எழுதுவதற்கு அவருடைய பணியே முக்கிய காரணமாக இருந்திருக்கும் என்பதை ஊகிக்க முடிகிறது. “காதால் கேட்பனவற்றையும் கண்ணால் காண்பனவற்றையும் கப்பல்களின் போக்குவரத்தையும் அவ்வப்போது நடைபெறும் அதிசயங்களையும் குறித்து வைக்க நான் துவங்குகிறேன்” என்று ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு எவ்வாறு எழுதினார் என்பதைக் குறிப்பிடுவதாக ஆலாலசுந்தரம் கூறியுள்ளார்.[6]

ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் அமைப்பும் மொழியும்

ஆனந்தரங்கரின் நாட்குறிப்பில் ஒவ்வொரு நாளின் தொடக்கமும் தமிழ் வருடமும், மாதம், நாள் மற்றும் கிறித்து வருடமும் மாதம் நாள், கிழமையும் குறிப்பிட்டு அதன்பிறகே அன்றைய நிகழ்வுகள் எழுதப்பட்டுள்ளன. அதன்படி, அவர் நாட்குறிப்பின் முதல் நாளை, தமிழ் “நள வருடம் ஆவணி மாதம் 25-க்கு கிறிஸ்து 1736, ஆண்டு செப்தெம்பர் மாதம் 6 ஆம் நாள் வியாழக்கிழமை” என்ற குறிப்புடனே இவருடைய நாட்குறிப்பு தொடங்குகிறது. மாதத்தின் பெயரை மட்டும் பிரெஞ்சு ஒலிக்குறிப்பில் எழுதுகிறார். நாட்குறிப்பு முழுவதும் பேச்சுமொழியிலேயே எழுதப்பட்டுள்ளது. பல நேரங்களில் ஆனந்தரங்கர் சொல்ல, அவருடைய உதவி ஆட்கள் நாட்குறிப்பை எழுதியுள்ளனர். இவர் எல்லா இடங்களிலும் ‘**ஆனந்தரங்கன்**’ என்று தமிழிலேயே கையொப்பம் இட்டுள்ளார். ஆனந்தரங்கர் பன்மொழி வித்தகராக இருந்துள்ளார். பிரெஞ்சு, ஆங்கிலம், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகள் தெரிந்தவராக இருந்தார். மலையாளத்திலும், போர்ச்சுக்கீசிய மொழியிலும் சிறிது பயிற்சி உண்டென தேசிகம்பிள்ளை கருதுவதாகவும், தென்னிந்திய வட இந்திய மன்னர்களோடு அரசியல் தொடர்பு வைத்திருந்ததால் பல நேரங்களில் இந்துஸ்தானி, பார்சி, மராத்தி முதலிய மொழிபெயர்ப்பாளர்களைத் தம்முடன் வைத்திருந்ததாக சிலம்பு நா.செல்வராசு குறிப்பிடுகின்றார். இவருடைய நாட்குறிப்பில் அன்றைக்குத் தமிழில் கலந்திருந்த பிரெஞ்சு, ஆங்கிலம், தெலுங்கு, பார்சி, அரபி, உருது மொழிச் சொற்களின் பயன்பாட்டினைக் காணமுடிகின்றது.

ஆனந்தரங்கர் வரலாறு

ஆனந்தரங்கர் கி.பி. 1709 ஆம் ஆண்டு மார்ச் 30-ஆம் நாள் சென்னையில் உள்ள பெரம்பூரில் பிறந்துள்ளார். இவருடைய தந்தை திருவேங்கடம் பிள்ளை பெரும்

வணிகராவார். ஆனந்தரங்கரின் தாயார் இவர் குழந்தையாக இருக்கும்போதே இறந்துவிடுகிறார். ஆனந்தரங்கர் இளம் வயதில் எம்பார் என்பவரிடம் கல்வி பயின்றுள்ளார். **ரங்கப்பா** என்றும் **ரங்கப்பிள்ளே** என்றும் ஆளுநர் போன்றோர் இவரை அழைத்துள்ளனர் என்பதை நாட்குறிப்பின் வழி அறியமுடிகின்றது. நாட்குறிப்பின் எட்டாம் தொகுதி பகுதி ஒன்றில் '**விசரத்ராய விசய ஆனந்த ரெங்கப்பராயர்**' அவர்கள் என அவரது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. புதுவை ஆனந்தரங்கர் வாழ்ந்த வீட்டில் கிடைத்த ஆனந்தரங்கன் கோவைச் சுவடியில் '**வஜாரத விஜய ஆனந்த ரங்கராயர் மீது பாடிய கோவைத் தமிழ்ப் பிரபந்தம்**' என்ற குறிப்பு காணப்பெறுகின்றது என்று சிலம்பு நா.செல்வராசு குறிப்பிடுகின்றார்[7].

புதுச்சேரியில் குடியேறுதல்

நைனியப்பப் பிள்ளை பிரெஞ்சு வணிகக்கழகத்தின் தரகராய்ப் பொறுப்பேற்ற சில மாதங்களில் ஆளுநர் எபேர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவரது மைத்துனர் திருவேங்கடம் பிள்ளையையும் (ஆனந்தரங்கப்பிள்ளையின் தந்தை) வேறுசில முதன்மை வாய்ந்த வணிகர்களையும் சென்னையிலிருந்து புதுச்சேரிக்கு வரவழைத்தார் நைனியப்பப்பிள்ளை. அப்போது வந்த ஆனந்தரங்கரின் தந்தை திருவேங்கடம்பிள்ளை நைனியப்பப் பிள்ளை சிறையிலிடப்பட்டதும் மீண்டும் சென்னை திரும்பினார். பின்னர் நைனியப்பரின் மகன் குருவப்பா தன் தந்தை குற்றமற்றவர் என்று நிரூபித்து வணிகக் கழகத்தின் தரகராகப் பொறுப்பேற்கிறார். அதன்பின் மீண்டும் திருவேங்கடம்பிள்ளை புதுச்சேரிக்கு வருகிறார். அரசு உதவியாளராக இருந்த திருவேங்கடம்பிள்ளை திவானாகப் பதவி உயர்வு பெறுகிறார். குருவப்பா இறந்த ஓர் ஆண்டிலேயே திருவேங்கடம்பிள்ளையும் இறக்கிறார். அப்போது ஆனந்தரங்கரின் வயது 17. அன்றைய ஆளுநர் லெனுவார் பரங்கிப்பேட்டையில் இருந்த வணிகக் கழகத்தின் நெசவுச் சாலைக்கும், சாயம் துவைக்கும் கிடங்கிற்கும் ஆனந்தரங்கரைத் தலைவராக்கினார்.

உடன்பிறப்பு

ஆனந்தரங்கரின் உடன்பிறந்த தம்பி பெயரும் திருவேங்கடம் பிள்ளை ஆகும். சென்னையை லெபோர்தொனே கைப்பற்றிய போது அங்கு துபாசியாகப் பணியாற்ற தன் தம்பி திருவேங்கடம் பிள்ளையை அனுப்பி வைக்கிறார் ஆனந்தரங்கர். அவர் சென்னையில் நடக்கும் அன்றாட நிகழ்வுகளைத் தனக்குக் கடிதமாக எழுதவேண்டும் எனக் கூறி ஒரு நூலையும் தாளும் சிவப்பு அரக்குக் கம்பு ஒன்றும் இறகு பத்தும் ஆனந்தரங்கர் திருவேங்கடம் பிள்ளைக்கு அனுப்பி உள்ளார். இவர் 13.09.1746 முதல் 14.10.1746 வரை நாள்தோறும் நாட்குறிப்பு எழுதி உள்ளார் என்று சிலம்பு நா.செல்வராசு குறிப்பிடுகிறார். தன் தம்பி துபாஷி வேலையை விட்டுவிட்டு வந்துவிட்டார் என்பது ஆனந்தரங்கருக்கு மிகுந்த மன வேதனையைத் தந்துள்ளது. இதனை, திருவேங்கடம்

முப்பத்தைந்து வயது உள்ளவன். நன்றாய்ப் படித்தவன், மகா புத்திசாலி, பார்வைக்கு நன்றாக இருப்பவன், யோகசாலி. இப்படி எல்லா நல்ல குணங்களையும் வைத்த ஈசுவரன் தைரியத்தையும் உத்தியோக ஆசையையும் வைக்காமல் வீட்டிலேயே இருக்கிறேன் என்று சொல்லுமாறு புத்தி வைத்திருக்கிறானே என்று 20.10.1746 ஆம் நாட்குறிப்பில் எழுதியுள்ளார். திருவேங்கடம்பிள்ளை ஒன்பது ஆண்டுகள் நோயுற்றுக் கிடந்து 14.10.1754 அன்று மரணமடைதுள்ளார்.

மனைவி மக்கள்

ஆனந்தரங்கப்பிள்ளை செங்கழுநீர்ப்பட்டுப் பாளையத்தைச் சேர்ந்த சேஷாத்திரி பிள்ளையின் மகள் மங்கத்தாய் என்பவரை மணந்தார். ஆனந்தரங்கர் தன்மனைவியை திருவேங்கடம் பிள்ளையின் மருமகள் என்றே நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். ஆனந்தரங்கருக்கு நான்கு பெண் குழந்தைகள் பிறந்த பின்னர் இரண்டு ஆண்குழந்தைகள் பிறந்தன. முதல் ஆண்குழந்தையின் பிறப்பு குறித்து அவருடைய நாட்குறிப்பில், 1748 ஜனவரி 7ல் தேவனாம் பட்டணம் மீது படையெடுக்கிற வேளையிலே ஸ்நானம் பண்ணிச் சாப்பிடவே பிற்பகல் மூன்று மணி ஆயிற்று. பின் தூங்கி எழுந்த ஆறு மணிக்குத் தேவனாம்பட்டணம் கோட்டை, ஊர் மார்க்கமெல்லாம் குறித்திருக்கிற படத்தைப் பார்த்துக்கொண்டு தன்னுடைய அலுவலக அறையிலே இருந்த நேரத்தில் திருவேங்கடம் பிள்ளையவர்கள் மங்காத்தா பிரசவ வேதனையிலிருக்கிறார் என்று சொன்னார்கள். அடுத்து அரும்பாத்தைப் பரசுராமப் பிள்ளையிடம் சண்டைக்கான சில முஸ்தீதுகளைச் செய்யச் சொல்லிவிட்டு, அழகப்ப முதலியாருடன் பிள்ளை பேசியிருக்கச்சே அப்போது வெங்கடாசலம். வந்து ஆண் பிள்ளை பிறந்ததென்று சொன்னான். கடக லக்னம்..... தங்கள் வீட்டிலே புத்திர சந்தானம் உண்டானால் எப்படியோ அப்படி சநதோஷமாகிச் சகலமான ஜனங்களும் பண்டிகை கொண்டாடினார்கள். சந்தா சாயபுவின் குடும்பத்தினர், படே சாயுபுவின் குடும்பத்தினர் வெளியூரிலிருந்த முஸ்லிம் தலைவர்கள் என்று பலரும் பூ, பழம், இனிப்பு, துணிமணி வகையறாக்களைத் தட்டுத் தட்டாக அனுப்பினர். சில நாட்கள் கழித்து வந்தவாசி கில்லேதார் நூறு வராகன் வருவாய் தரும் ஒரு கிராமத்தைப் பிள்ளைக்கு மானியமாய்க் கொடுத்தார்[8] என்று ஆலாலசுந்தரம் குறிப்பிடுவதிலிருந்து ஒரு ஆண் குழந்தையின் வருகையினை எதிர்பார்த்துப் பிறந்த குழந்தை என்பதால் அனைவரிடமும் பெருமகிழ்ச்சி காணப்பட்டது. பலரும் பல்வேறு பரிசுப் பொருட்களை அவருக்கு வழங்கினர் என்பதை அறியமுடிகிறது.

ஆனந்தரங்கர் செய்த வணிகம்

ஆனந்தரங்கர் பரங்கிப்பேட்டை பிரெஞ்சிந்திய வணிகக் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற பின் துணிகளைக் கட்டுப்போட்டு கப்பலில் ஏற்றுவது, வணிகக்

கழகத்திற்குச் சரக்குகள் பெற்றுத்தருவது, கிராமங்களைக் குத்தகைக்கு எடுப்பது எனப் பல்வேறு பணிகளைச் செய்தார். துணிகள் வாங்கிக்கொடுப்பதற்காக துய்ப்ளே முதலிய ஆளுநர்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளார். வெளிநாட்டு வணிகத்தில் துய்ப்ளேவுடன் பங்குதாரராகவும் இருந்துள்ளார்.

புதுவையிலிருந்து மெக்கா, மணிலா, மலேயா, பினாங்கு, சீனா, மொரீஷியஸ், மடகாஸ்கர், பிரான்சு முதலிய நாடுகளுக்கும் பரங்கிப்பேட்டை, கடலூர், காரைக்கால் ஆகிய இடங்களுக்கும் கப்பல் மூலம் வணிகம் நடைபெற்றுள்ளது. ஆனந்தரங்கர் கடல் வணிகத்திற்கு என்று **"ஆனந்தப் புரவி"** எனும் பெயரில் ஒரு கப்பலை வைத்திருந்தார்.[9] மேலும், ஆனந்தரங்கர் பட்டைச் சாராய ஆலை வைத்து வணிகக் கழகத்திற்குச் சாராயம் வழங்கியுள்ளார். ஆங்கிலேயரின் கொழும்புச்சாராயம், கோவாச் சாராயம் முதலியவற்றைப் புதுச்சேரிக்கு வரவழைத்து பலவகை சாராயங்களைக் கடைவைத்து விற்பனை செய்துள்ளார்.

ஆனந்தரங்கர் பாக்குக் கிடங்கு, புடவைக்கிடங்கு, நீலக் கிடங்கு, மளிகைக்கடை, சாராயக்கடை முதலியவற்றை வைத்திருந்தார். பாக்குக்கிடங்கையே அவரது அலுவலகமாகக் கொண்டிருந்தார். வணிகக் கழகத்திற்காக நெல் கொள்முதல் செய்துள்ளார். குதிரை வாங்கி விற்கும் வியாபாரமும், சுண்ணாம்பு வணிகமும் செய்துள்ளார். இவரது முதன்மையான வியாபாரங்களுள் ஒன்றாக பவழ வியாபாரமும் இருந்துள்ளது.

கிழக்கிந்திய வணிகக்கழகம் தம் பொறுப்பில் இருக்கும் கிராமங்களில் இருந்து நிலவருவாய் வரியையும் பிற வரியையும் வசூலிக்கும் பொறுப்பை ஆண்டுக் குத்தகைக்கு விடும். காரைக்காலைச் சேர்ந்த கிராமங்களை ஆனந்தரங்கர் குத்தகைக்கு எடுத்துள்ளார். காரைக்கால் மட்டுமின்றித் திருமலைராயன் பட்டினம், வஞ்சியூர், சேத்துப்பட்டு, அச்சிறுபாக்கம், வந்தவாசி, விழுப்புரம், சுப்பூர், செஞ்சி, வன்னிப்பட்டு முதலான வெளியூர்களும் ஆனந்தரங்கரின் கீழ் வரி செலுத்தியுள்ளது.[10] 1746 ஆம் ஆண்டின் தலைமைக் குத்தகைதாரராக ஆனந்தரங்கப்பிள்ளை இருந்துள்ளார்.

ஆனந்தரங்கரின் அரசியல் வாழ்க்கை

ஆனந்தரங்கர் துபாஷியாக இருந்தபோது அவருக்கு அளிக்கப்பட்ட பொறுப்புகளையும் பணிகளையும் ஜெயசீல ஸ்டீவன் பின்வருமாறு வகைப்படுத்துகிறார்.

1. இந்திய மன்னர்கள் வணிகர்கள் முதலியவரிடமிருந்து வரும் கடிதங்களைப் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்தல்.

2. இந்திய மன்னர்களும் பிரெஞ்சு ஆளுநர்களும் நிகழ்த்தும் பேச்சுவார்த்தை, உடன்படிக்கை முதலியவற்றின்போது மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றுதல்.
3. இந்திய மொழிகளில் கடிதங்களை எழுதுதல்,
4. துவிபாசி தமிழர்களின் தலைவராக அறிவிக்கப்படுவார். எனவே, தமிழ்-பிரெஞ்சு நிர்வாகத்திற்கு இடையே தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார்.
5. பிரெஞ்சு வணிகக் கழகத்திற்கு சரக்குகளை வாங்கும்போதும் கழகத்தின் சரக்குகளை விற்கும்போதும் தரகுத்தொகை பெறுதல்.
6. தங்கம், வெள்ளி நாணயங்களை அச்சடிக்கும் பொறுப்பேற்று நாணய மதிப்பில் அரை சதம் தரகு பெறுதல்.
7. புதுவைச் சாவடி நீதிமன்றப் பொறுப்பேற்றல், நீதிவழங்கல், பிரெஞ்சு நீதிபதிக்குத் துணையாகச் செயலாற்றல். முதலான பொறுப்புகள் அவருக்கு வழங்கப்பட்டன.

ஆனந்தரங்கருக்குக் கிடைத்த மதிப்பும் மரியாதையும்

ஆனந்தரங்கர் வணிகராக தன் வாழ்க்கையைத் தொடங்கினாலும் ஒரு அரசர் போலவே வாழ்ந்தார். புதுவை மற்றும் தமிழகத்தைச் சுற்றிலும் பல்வேறு இடங்களை ஆண்ட மன்னர்கள் இவர்மேல் மிகுந்த மரியாதை கொண்டிருந்தனர். 1749ஆம் ஆண்டு முசபர்சங், 3000 குதிரைகளை இவருக்குக் கொடுத்து '**மன்சுபேதார்**' என்ற பட்டமும் வழங்கினார். '**வஜாரதராய விஜயர்**' என்னும் பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. செங்கற்பட்டு கோட்டைக்குத் தளபதியாகவும் செங்கல்பட்டு மாவட்டம் முழுமைக்கும் ஜாகிர்தாராகவும் நியமிக்கப்பட்டார். துய்ப்ளே ஆட்சியில் ஆனந்தரங்கருக்குத் தனிப்பட்ட உரிமைகள் வழங்கப்பட்டன. "ஆனந்தரங்கப்பிள்ளை வெளியிலே செல்லும்போது அரிக்கை, சேவகர், பல்லக்கு, இரட்டை குடை சகிதம் செல்லும் உரிமை பெற்றிருந்தார். அலுவலகப் பணியில் இருக்கும்போது அங்கி, பாகை தரித்தும் வெள்ளிப் பிரம்பு முதலிய பிற சின்னங்களோடும் இருப்பார்"[11] என்று ஆலாலசுந்தரம் குறிப்பிடுகிறார். அவருக்கு ஆளுநர் மாளிகைக்குள் பல்லக்கில் செல்லும் உரிமை வழங்கப்பட்டிருந்தது. அப்போது மேளவாத்தியங்கள் முழங்கும். ஆளுநர் மாளிகைக்குள் செருப்பு அணிந்து செல்லவும் உரிமை வழங்கப்பட்டிருந்தது. பொதுமக்கள் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் உரிமையும் அவருக்கு இருந்தது. இவ்வாறு அரச மரியாதையுடன் துய்ப்ளே காலத்தில் வாழ்ந்த ஆனந்தரங்கரின் வாழ்க்கை ஒரு கட்டத்தில் வீழ்ச்சியை நோக்கி நகரத்தொடங்கியது. இதற்குக் காரணமாக மதாம் துய்ப்ளே இருந்தார்கள் என்று பல இடங்களில் அவரே குறிப்பிடுகிறார்.

ஆனந்தரங்கருக்கும் துய்ப்ளேவுக்குமிடையிலான உறவு

ஆனந்தரங்கர் ஆளுநர் துய்ப்ளேவிடம் துபாஷியாக மட்டுமல்லாமல் எல்லா அரசியல் மற்றும் அந்தரங்கம் சார்ந்த விஷயங்களையும் பேசக்கூடியவராக இருந்தார். ஒருசமயம் ஆனந்தரங்கர் மீது லஞ்சம் வாங்கியதாக புகார் கொடுக்கப்படுகிறது. அந்த வழக்கை விசாரிக்கும் துய்ப்ளேவிடம் இது பொய்யான குற்றச்சாட்டு என்பதைக் கூறுகிறார். ஆனந்தரங்கர் மீது பொய் குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்த துய்ப்ளே, ஆனந்தரங்கரை அழைத்து, பேசி இருக்கிறார். அதன் பேரிலே என்னை அழைத்து, எனக்கு மனது சமாதானமாகும் படியாய், ரங்கப்பிள்ளே, இங்கே வா. உன் பேரிலே எந்நேரமும் விவாதங்களாய் என் வீட்டில் (மனைவி) தானே பொல்லாப்பான விஷயங்களாய்ச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் இனிமேல் என்றென்றைக்கும் உன்னுடைய பேரெடுக்காமல் இருக்கத்தக்கதாகப் பண்ணுவிக்க வேண்டுமென்று சொல்லியாங்காட்டும் இதை மத்திசத்திலே விட்டேன். நீ சும்மா இரு என்று சொல்லி நான்கு பேரை மத்தியஸ்தராக நியமித்து விவகாரத்தைத் தீர்க்கச்சொன்னார். என்ற குறிப்பின் வழி துய்ப்ளே ஆனந்தரங்கர் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். தன் மனைவியும் மற்றவருமே அவர்மீது வீண் பழி சுமத்துவதை அறிந்திருந்த அவர் அதை விலக்கவே இவ்வழக்கை பொதுவில் நடத்துவதாக துய்ப்ளே ஆனந்தரங்கரைச் சமாதானப் படுத்துகிறார்.

அரசியல் வாழ்க்கையின் வீழ்ச்சி

ஆனந்தரங்கர் லெனுவார், துய்மா, துய்ப்ளே காலத்தில் மிகுந்த செல்வாக்கோடு வாழ்ந்தார். துய்ப்ளேவின் இறுதிக்காலகட்டத்தில் மதாம் துய்ப்ளே மூலம் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்தார் ஆனந்தரங்கர். அவர் மீது ஏற்பட்ட பொறாமை காரணமாகவும் அதிகாரம் காரணமாகவும் ஆனந்தரங்கர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்தி உள்ளார். ஆனந்தரங்கர் மீது பொறாமை கொண்ட சிலரும் மதாமோடு இணைந்து அவரைப் பற்றி ஆளுநர் துய்ப்ளேவிடம் பல்வேறு புகார்களைக் கொடுத்தனர். "ரங்கப்பன் இடையன் என் புரஷனுக்கு ஊரெல்லாம் கொள்ளையிட்டுக் கொடுத்து அவர் கண்ணை மூடிப்போட்டு ஊரிலே இவன் குவர்னதோர்த்தனம் பண்ணுகிறான். அவனைத் தீர்த்து விடுகிறேன்". (தொகுதி 4. பக். 232,233) என்று மதாம் கூறிய வசைமொழிகளைப் பிறர் வாயிலாக அறிந்த ஆனந்தரங்கர் தம் நாட்குறிப்பில் எழுதியுள்ளார்[12]. ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினை காரணமாக 02.08.1754-இல் துய்ப்ளே பதவி நீக்கம் செய்யப்பெற்றார். 25.03.1755 அன்று துவால் தெ லெறி என்பவர் புதுவையின் ஆளுநராகப் பொறஉப்பேற்றுக்கொண்டார். ஆளுநர் லெறிக்கும் ஆனந்தரங்கருக்கும் இடையே நல்ல உறவு நிலவவில்லை என்பதை அவர் தம் நாட்குறிப்பில் பதிவுசெய்துள்ளார். ஊரில்

ஆனந்தரங்கரின் மீது பொறாமை கொண்டவர்கள் கூறும் பேச்சுகளை ஆளுநர் நம்பி ஆனந்தரங்கரைக் கடிந்துகொள்கிறார். அப்போது ஆனந்தரங்கர், "அவர்கள் உம்மிடம் பொய்க்கதை அளக்கிறார்கள், விசாரித்து உண்மையைத் தெரிந்துகொள்ளுங்கள்" (தொகுதி 9, பக்.373, 374) என்று கூறியதாக எழுதியுள்ளார். **"புதுவையில் 45 வருடங்கள் மிகுந்த கௌரவத்துடனும் நேர்மையுடனும் வாழ்ந்த தன் புகழ் பிரான்ஸ், டெல்லி எனப் பல இடங்களிலும் பரவியது. ஆனால் கடந்த ஒருவருடமாக நான் துப்பில்லாதவன் என்று பலரும் பேசுவதைக் கேட்கும்போது எனது கெட்ட காலத்தைத்தான் நான் நொந்துகொள்ள வேண்டி உள்ளது"** (ஆலாலசுந்தரம்,1999) என்று ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ளார். மேலும் தமிழர்களின் பிரச்சனைகளைக் கேட்டு தீர்ப்பு வழங்கும் உரிமை பெற்றிருந்த ஆனந்தரங்கருக்கு அவர்களைத் தண்டிக்கும் உரிமை இல்லை என ஆளுநர் லெறி கூறியுள்ளார். இந்த உரிமைகூட இல்லாமல் எப்படி நிர்வாகம் செய்ய முடியும் என்று கேட்டு, தனக்கு உரிமை உண்டு என்பதற்கான ஆவணங்களை லெறியிடம் காண்பித்துள்ளார் (தொகுதி 10, பக்.46-50). புதுச்சேரியிலிருந்து அரசியல், இராணுவச் செய்திகளை எல்லாம் ஆங்கிலேயருக்கும் முகம்மதியருக்கும் கூறுவதாக ஆனந்தரங்கர் மீது பழி சுமத்தப்பட்டது. அன்று முதல் ஒற்றாடல் வேலையையும் நிறுத்திக்கொண்டார் (தொகுதி 10, பக். 384,385) 1757 நவம்பரில் குத்தகைப் பணமாக நான்கு லட்சம் தரவேண்டி உள்ளது. இத்தொகையைச் செலுத்தாவிட்டால் ஒரு வாரத்தில் கைது செய்ய நேரிடும் என்று லெறி கூறியுள்ளார். அதற்கு ஆனந்தரங்கர் தனக்கு பதினாறு லட்சம் தரவேண்டியது பாக்கி இருக்கும் போது நீங்கள் எப்படி நான்கு லட்சம் கேட்கமுடியும் என்று கேட்டுள்ளார். அப்போது, **"இப்பட்டணத்தில் உம்முடைய அதிகாரம்தான் இறுதியானது. அநீதியாகவும் உண்மைக்கு மாறாகவும் நடக்க நீர் விரும்பினால் உம்மைத் தடுக்கும் அதிகாரம் ஒருவருக்கும் இல்லை. ஆகவே, என்னைக் காவலில் போட விரும்பினால் உடனே செய்யலாம். பிற தண்டனையும் வழங்கலாம். இரண்டு சல்லி கூட நான் செலுத்தமாட்டேன். சிறையில் அடைத்து விடுவீர் எனப் பயந்து ஒருவாரத்தில் பணம் தருவேன் என்று நீர் கருதவேண்டாம்"** (தொகுதி 11. பக்-81-84) என்று ஆளுநர் லெறியிடம் கூறியுள்ளார்.

29.04.1758 அன்று பிரான்சு மன்னரின் முழு அதிகாரியாக லல்லி என்பவர் புதுவைக்கு வந்தார். எல்லா விஷயத்திலும் லெறி தனக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்றும் ஆணையிட்டார். இதனால் இருவருக்கும் இடையே முரண்பாடு தோன்றியது. ஆனந்தரங்கருடைய நிலைமையும் வீழ்ச்சியை நோக்கியே சென்றது. ஆளுநர் லெனுவார் காலத்தில் ஆனந்தரங்கருக்குத் தரப்பட்ட பூந்தோட்டக் கச்சேரி என்னும் இடத்தைப் பன்றி வெட்டும் பட்டிக்கு வேண்டும் என்று தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டார் ஆளுநர் லெறி.

“முப்பது நாற்பது ஆண்டுகளாக இந்தப் பட்டணத்தில் சந்தோஷமாக வாழ்ந்து வந்தேன். எனினும் இந்த மூன்று நான்கு ஆண்டுகளாக எந்த உத்தியோகமும் இல்லாமல் குடும்பம் நடத்தவே சிரமப்படுகிறேன். இருந்தாலும் கும்பெனிக்கு கஷ்டம் வந்து செலவுக்குக்கூட பணமில்லாமல் சிரமப்படும்போது முடிந்ததை நானும் செய்யத்தான் வேண்டும். என்னிடம் ஒரு யானை, இரண்டு மூன்று குதிரைகள், சில எருதுகள், ஒரு வீடு, தோட்டம் உள்ளன. இவற்றை விற்றுக்கொள்ளுங்கள்” என்று ஆனந்தரங்கர் கூறியுள்ளார்[13]. இந்தக் குறிப்பில் எந்தவேலையும் இல்லாமல் என்ற தொடரைக்கொண்டு ஆனந்தரங்கர் 1756இலேயே துபாஷி பணியிலிருந்து விலகி இருக்கவேண்டும் என்று ஆலாலசுந்தரம் குறிப்பிடுகிறார்.

ஆனந்தரங்கரின் நம்பிக்கைகள்

ஆனந்தரங்கருக்கு கடவுள் பக்தி அதிகம். சோதிடத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர். ஒருவருக்கு நல்லது கெட்டது இதனால்தான் நடக்கிறது என்பதை கிரக நிலைகளைக் கொண்டு கணக்கிடுபவர். தன் மனைவி இறந்தபோது இருந்த கிரக நிலைகளையும், நாள், நட்சத்திரம், நாழிகை என அனைத்தையும் தனது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

“1757 பிப்ரவரியில் 160 அடி நீளமும்16 அடி அகலமும்--- அடி உயரமும் உடைய ஒரு மீன் கூனிமேட்டுக்குத் தெற்கில் கடற்கரையில் செத்து ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் தோல் பனைமர் பட்டைபோல் இருந்தது. பத்து வருஷத்துக்கு முன்பும் 30அடி நீளமும் 5அடி உயரமுமான ஒரு மீன் இப்படி ஒதுக்கப்பட்டுக் கிடந்தது. அவ்வாண்டில்தான் இங்கிலீசுக்காரர்களின் புதுச்சேரி முற்றுகையும் நவாபு அன்வருதீனின் கொலையும் நிகழ்ந்தன. எனவே இப்பொழுதும் ஏதோ விரீதம்நடக்கப்போகிறது என்று மக்கள் அஞ்சினர் (X:360) என்று தன் நாட்குறிப்பில் குறிப்பிடுகிறார்”[14]. இதுபோல் விநோத நிகழ்வுகள் நடக்கும்போதெல்லாம் ஏதோ விபரீதம் நடக்கப்போவதாக மக்களிடையே ஒரு பயமும் அது சார்ந்த நம்பிக்கையும் இருந்தது என்பதை அவருடைய நாட்குறிப்பில் பல இடங்களில் காணமுடிகின்றது.

போர், பஞ்சம்

ஆங்கிலேயப் படைகள் 1760 புதுச்சேரியின் பல்வேறு பகுதிகளை முற்றுகையிட்டன. ஆங்கிலேயரின் தாக்குதல்களைத் தாங்கமுடியாமல் பின்வாங்கிய பிரெஞ்சுப் படைகள் புதுவையின் பல ஊர்களைக் கொள்ளையிட்டன. கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. இராணுவத்திற்குக் கொடுக்கக் கூட பணம் இல்லாமல் பிரெஞ்சு அரசு தடுமாறியது. புதுவையில் உள்ள செல்வந்தர்கள் ஒவ்வொருவரும் ஐம்பது சிப்பாய்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தியது. பணம்

உள்ள செல்வந்தர்களின் பட்டியலைத் தயாரித்துத் தருமாறு ஆனந்தரங்கர் 24 மணிநேரக் காவலில் வைக்கப்பட்டார். இச்சூழலில் ஆயிரக்கணக்கானோர் புதுவையிலிருந்து வெளியேறினர். ஊரைவிட்டு போவோர் போகலாம் என்ற உத்தரவினை பிரெஞ்சு அரசு வெளியிட்டது. இந்நிலையில் ஆனந்தரங்கரின் வீட்டிலிருந்த நூறு பேரும் போவதற்கு ஆங்கிலேயப் பாஸ்போர்ட்டும், தரங்கம்பாடி கவுன்சில் கடிதமும் வேண்டியுள்ளார் ஆனந்தரங்கர். பின், அவரின் நெருங்கிய உறவினர் மட்டும் தங்க ஏனையோர் ஊரைவிட்டு வெளியேறியதாக 24.09.1760 நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனந்தரங்கர் மறைவு

1756 முதலே ஆனந்தரங்கர் அடிக்கடி நோய்வாய்ப் பட்டுள்ளதை அவருடைய நாட்குறிப்பின் வழி அறியமுடிகிறது. சொத்தைப்பல்லால் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார், மூலநோய் பாதிப்பில் இரண்டு ஆண்டுகள் இருந்துள்ளார். 1759-இல் மேலும் பல நோய்களுக்கு அவர் ஆளானதை நாட்குறிப்புகள் தெரியப்படுத்துகின்றன. **“ஒருசமயம் பதினேழு நாட்கள் உடல்நலமின்றி இருந்து நல்ல நாள் பார்த்து ஒருநாள் மாலை வீட்டைவிட்டு வெளியே சென்று வந்துள்ளார். சனியின் பார்வை காரணமாகவே மரண அச்சம், நண்பர்கள், செல்வம், சீர்மை முதலியவற்றின் இழப்பு நேருகின்றன என்றும் அந்தக் கெட்டகாலம் முடிவிற்கு வந்துவிட்டது என்றும் ஆனந்தரங்கர் நம்பினார்”**[15] என்பதிலிருந்து அவர் மனதளவிலும் மிகுந்த சோர்வடைந்திருந்ததை உணர முடிகிறது. ஆங்கிலேய படையின் முற்றுகைக் காலத்தில் பல விதமான கவலைகள் ஆனந்தரங்கரை அலைக்கழித்தன. நோய்களும் தீவிரமடைந்தன. ஆனந்தரங்கரின் உறவினர்கள் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேறினர். தான் கடல்வழியாகச் செல்வது தனக்கு உயிர்க்கொல்லியாக முடியும் என்று ஆனந்தரங்கர் கருதினார். 11.01.1761 அன்று ஆனந்தரங்கர் எழுந்து பல்துலக்கிக் கூடத்தில் நாற்காலியில் அமர்ந்து இரண்டு மணிநேரம் பேசி இருந்துவிட்டுப் படுத்துக்கொண்டார். பதினோரு மணிக்குத் தனக்கு வெலவெலப்பு மிகுந்துள்ளதாகக் கூறியுள்ளார். பிற்பகல் சிறிது உண்டபின் உடல் சோர்வாயும் வாய் உலர்ந்து தாகமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அன்றிரவு உடல்மோசமடைந்தது. வைத்தியர் வந்து பார்த்துவிட்டு நாடி கிடைக்கவில்லை என்றார். 12.01.1761 காலை பத்து மணிக்குச் சின்னமுதலி தன் குடும்பத்தை ஊரைவிட்டு அனுப்ப ஒரு கடிதம் வேண்டும் என்று ஆனந்தரங்கரைக் கேட்டுள்ளார். ஆனந்தரங்கர் தன் மருமகன் சிதம்பரநாதப்பிள்ளைக்குக் ஒரு கடிதம் எழுதச்சொல்லி எழுதியபின் கையெழுத்துப்போட்டுள்ளார். பிறகு அவரது உடல் மிகவும்... என்றவாறு வாக்கியம் முற்றுப்பெறாமல் முடிந்துள்ளது[16]. (சிலம்பு நா. செல்வராசு, பக். 44, 45) கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, 12.01.1761 திங்கள் கிழமை ஐந்து நாழிகைக்குப் பட்டணத்தின் பேரிலே பீரங்கிக் குண்டுகள் விழுந்துகொண்டிருந்த

வேளையில் மகாராஜ ராஜ ஸ்ரீ … காலமானார் என்ற நினைவுக்குறிப்பைத் தன் நூலில் குறிப்பிட்டுள்ளதாக சிலம்பு நா. செல்வராசு குறிப்பிடுகிறார்.

தலைசிறந்த வணிகராகவும், துவிபாஷியாகவும், அரசியல் ஆலோசகராகவும், நிதி திரட்டுதல், நிதி வழங்குதல், ஒற்று வேலை செய்தல், போர் ஆலோசனை செய்தல், பல மன்னர்களோடு தொடர்பு கொள்ளுதல் எனப் பல்வேறு நிலைகளிலும் சிறந்து விளங்கிய ஆனந்தரங்கர் காலம் கடந்தும் வாழ்கிறார் என்பதற்கு அவருடைய நாட்குறிப்புகளும், புதுவையில் அவர் பெயரில் அமைந்துள்ள பல்வேறு தெருக்களும், அவர் வாழ்ந்த இல்லமும் சான்றாகின்றன.

ஆனந்தரங்கர் பற்றிய இலக்கியங்கள்

ஆனந்தரங்கர் வாழ்ந்த காலத்திலேயே அவர்மீது இலக்கியங்கள் பாடப்பட்டுள்ளன. அவர் பல புலவர்களை புரக்கும் வள்ளல் தன்மை கொண்டவராக இருந்துள்ளார். திருவாரூரைச் சேர்ந்த தியாகராய தேசிகர் ஆனந்தரங்கன் கோவை என்னும் நூலை 1739ல் பாடத்தொடங்கி 1755ஆம் ஆண்டில் முடித்துள்ளார். நமச்சிவாயப் புலவர், படிக்காசுப்புலவர், மதுரகவிராயர், தியாகராய தேசிகர், ஜவ்வாது புலவர், இராமகவிராயர் ஆகியோர் ஆனந்தரங்கர் தனிப்பாடல்களைப் பாடியுள்ளனர். கள்வன் நொண்டிச் சிந்து என்று ஒரு இலக்கியமும் ஆனந்தரங்கர் மீது பாடப்பட்டுள்ளது. 1934-இல் அரிமதி தென்னகன் ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் என்னும் நூலை இயற்றினார். பிரபஞ்சன் அவர்கள் வானம் வசப்படும், மானுடம் வெல்லும் என்னும் இரு நாவல்களையும் ஆனந்தரங்கர் வாழ்க்கை வரலாற்றை/நாட்குறிப்பை மையமாக வைத்து எழுதப்பட்டவையாகும். இவ்வாறு பதினெட்டாம் நூற்றாண்டு தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் இறுதி வரை ஆனந்தரங்கர் குறித்த இலக்கியங்கள் தமிழில் வெளிவந்துள்ளன. தமிழ் மட்டுமல்லாமல் பிற மொழிகளிலும் ஆனந்தரங்கர் மீது இலக்கியங்கள் பாடப்பட்டுள்ளன. சமஸ்கிருதத்தில் 1752-இல் சீனிவாச கவி என்பவர் ஆனந்தரங்க விஜய சம்பு என்னும் காவியத்தை இயற்றினார். தெலுங்கில் இலஷ்மணகவி கஸ்தூரி ரங்க்கவி என்னும் புலவர் ஆனந்தரங்கரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு ஆனந்தரங்கராட் சந்தமு என்னும் இலக்கியத்தை இயற்றினார். இவ்வாறு பதினெட்டாம் நூற்றாண்டு வரலாற்றில் தவிர்க்க முடியாத இடத்தை வகித்த ஆனந்தரங்கப்பிள்ளை குறித்த இலக்கியங்கள் ஒருபுறம் இருக்க அவருடைய நாட்குறிப்புகளைப் பதிப்பிக்கும் பணியும் நாட்குறிப்புகள் குறித்த ஆய்வுப்பணிகளும் தொடர்ந்து இன்றளவும் நடைபெற்று வருவது அவருடைய வரலாற்று முக்கியத்துவத்தைப் பறைசாற்றுகின்றன.

துணைநூற்பட்டியல்

1. ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு, தொகுதி 1, 1998. புதுச்சேரி கலை பண்பாட்டுத்துறை, புதுச்சேரி.
2. ஆலாலசுந்தரம், இர.1999, ஆனந்தரங்கப்பிள்ளை காலத் தமிழகம், ஜி.ஆர்.எஸ். பதிப்பகம், புதுச்சேரி.
3. ஆலாலசுந்தரம், இர.2001, ஆனந்தரங்கப்பிள்ளை கால அரசியலும் சமுதாயமும், ஜி.ஆர்.எஸ். பதிப்பகம், புதுச்சேரி.
4. செல்வராசு, சிலம்பு. நா. 2010 (இ.ப), இந்திய இலக்கியச் சிற்பிகள் ஆனந்தரங்கப்பிள்ளை, சாகித்ய அகாதெமி, புதுதில்லி.

REFERENCES

1. Anandarangappillai's Diary, Volume 1, 1998. Puducherry Department of Art and Culture, Puducherry.
2. Alalasundaram, R. 1999, Anandarangappillai kaala thamizhagam, G.R.S. Publisher, Puducherry.
3. Alalasundaram, R. 2001, Anandrangappillai kaala Arasiyalum Samuthaayamum, G.R.S. Publisher, Puducherry.
4. Selvarasu, Chilambu. Na. 2010 (E.P), Inthiya ilakkiya chirpikal: Anandarangapillai, Sahitya Academy, New Delhi.